(9) தனியார் அலுவல்கள்.

தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்ட முன்வடிவு — தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிக் கட்டுதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/74).

திரு. அழகர்சாமி தொடர்ந்து பேசலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதை அறிமுகப்படுத்தும்போது பல விவரங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக நம் இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், தொழிலாளர்கள் அதிகமாகக் கடன் சுமையினுல் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்பதை புள்ளி விவரங்களில் இருந்து தெரிந்து கொள்கிருேம். அதுவும் இன்று ஏறக்குறைய இவர்கள் 500 கோடி ரூபாய் வரை கடன் சுமையினுல் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இதில் குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், சர்க்கார் கடன் ஆகியவை மொத்தமே 25 சதவிகிதம்தான் இருக்கும். மீதி பெரும் பகுதி தனியார்களிடத்தில் பட்டுள்ள கடன்களாகவேதான் இருக்கின்றன. அதுவும் சென்ற ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சிக்குப் பிறகு மேலும் பலர் புதிய கடனாளியாக, பழைய கடன்களை, வட்டியைக் கூடக் கட்ட முடியாதவர்களாகத்தான் ஆகியிருப்பார்கள். இது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற பெருந் தொல்லையாக இருக்கின்றது.

இதை நிவர்த்திக்க ஆரம்ப காலத்தில் இருந்தே பல நடவடிக்கைகள் பல சர்க்கார்களால் எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன என்ருலும் கூட சரியான நிவாரணம் கடன்பட்ட மக்களுக்கு ஏற்படவில்லை.

இதற்கு முன்னுலேயே இது சம்பந்தமாகக் கூறியிருக்கிறேன். 1937 ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக வந்தபோது ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனுல் சிறிது நிவாரணம் அப்போது ஏற்பட்டது என்பது உண்மை. அதை முன்பே சொல்லியிருக்கிறேன். காரணம், அப்போது